# அலவ்வ பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 18 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, அலவ்வ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அலவ்வ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் மூலதன உதவியாக ரூபா 72,267,999 தொகை கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டிற்காகக் கிடைத்த ரூபா 17,170,025 தொகையான மூலதன பெறுவனவுகளும் அதில்

உள்ளடக்கப்பட்டமையினால் மூலதன உதவி ரூபா 17,170,025 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் செலுத்தவேண்டிய ரூபா 1,510,800 சம்பள மீளளிப்பு பெறப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் உரிய வருமான உதவி (சம்பள மீளளிப்பு) மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் கடன்பட்டோர் (சம்பள மீளளிப்பு) ரூபா 1,510,800 தொகை குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 1,968,712 தொகை நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் உரிய கோவையின் பிரகாரம் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தின் அளவு ரூபா 1,177,750 ஆனமையால் ஆண்டிற்குரிய நீதி மன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 790,962 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 19,866,805 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,299,052 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,173,159 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 3,459 | 2,772 | 687 |
| (ii) | வாடகை | 7,399 | 6,942 | 457 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 546 | 546 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 22,972 | 22,972 | 20,237 |

### 2.2.2 ஆதன வரி

ஆண்டிற்குரிய ஆதனவரி பற்றுச்சீட்டிடல்கள் ரூபா 1,307,154 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் 51 சதவீதமாக ரூபா 669,335 தொகை நிலுவையாக இருந்தது. இந்த நிலுவை தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 33-42 ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு இறுதி அறிவித்தல் 75 அலகுகளுக்குரியதாகக் காணப்பட்ட ரூபா 156,393 தொகையான நிலுவை தொடர்பாக மாத்திரமே அனுப்பப்பட்டிருந்தது. அதில் 38 அலகுகளுக்குரிய ரூபா 131,279 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 538,076 தொகையான நிலுவை தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,968,712 ஆகவும் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 18,268,708 ஆகவும் இருந்தது.

### 2.2.4 களியாட்ட வரி

சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற சினிமா மண்டபத்தின் களியாட்ட வரி அளவிடல்களுக்குரிய நுழைவுச் சீட்டு முத்திரை குத்தப்படாதிருந்ததுடன் சினிமா மண்டபத்தினால் பேணப்பட்ட அறிக்கையை அடிப்படையாக கொண்டு ரூபா 369,588 தொகையான களியாட்டவரி வருமானம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையினால் 2012 ஆம் ஆண்டின் போது வாடகைக்கு வழங்கப்பட்ட பொது மலசல கூடத்திற்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் நீர் மற்றும் மின்சாரம் என்பன வாடகையாளரினால் ஏற்கப்பட வேண்டும் என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் நீர்க்கட்டணத்திற்காக மீளாய்வாண்டின் ஒக்தோபர் வரையில் ரூபா 12,906 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

### 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 218 ஆம் விதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சபையின் காணி மற்றும் கட்டிடத்தின் அளவுகள் உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 18,706,555 பெறுமதி கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டின் இறுதியில் காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 18,706,555 ஆக இருந்த போதிலும் ரூபா 12,958,285 பெறுமதியான 29 காணி மற்றும்

கட்டிடங்களுக்காக சட்டரீதியான தன்மை (உரித்துறுதி) உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிலையான சொத்தின் கீழ் காணப்பட்ட ரூபா 2,000,000 பெறுமதியான சனசமூக நிலையம் மற்றும் ரூபா 1,200,000 பெறுமதியான வாராந்த சந்தைக் கட்டிடத்தின் பெறுமதி உறுதிப்படுத்தப்படாமல் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து செயற்பாடற்றுக் காணப்படுகின்ற ரூபா 200,000 பெறுமதியான இல. 37-5160 என்ற போர்ட் உழவு இயந்திரத்தை ஏலத்தில் விற்பனை செய்து வைப்பதற்கோ அல்லது பழுதுபார்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 நவம்பர் 28 ஆந் திகதிய 1317 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்ட ‘‘வீடமைப்பு ஆதன அபிவிருத்தி மற்றும் காணிகளைக் கூறிட்டு விற்பனை செய்தல்’’ தொடர்பான உப விதியின் 11(5) ஆம் பிரிவின் பிரகாரம் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யும் போது பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிக்கூறுகளுக்குரிய உரித்துறுதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் சபையினால் பேணப்பட்டிருந்த காணிப்பதிவேட்டின் பிரகாரம் 06 காணிக் கூறிடல்களுக்குரிய உறுத்துறுதிகள் பெறப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 87 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 74 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செயலாளர் பதவி பதில் கடமை அடிப்படையில் காணப்படுவதுடன் 04 தொழில்நுட்ப உத்தியோகத்தரில் 01 பேரும், 04 வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவிகளில் 02 பேரும், 03 நூலகர் பதவிகளில் ஒரு பதவியும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 2.6 சபைக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காணித்துண்டுகளை கையேற்பதற்காக தொடுக்கப்பட்ட 4014 ஆம் இலக்க மற்றும் 6391 ஆம் இலக்க இரண்டு வழக்குகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணப்பட்டன.

(ஆ) சபையினால் காணி உரித்தாளர்களின் அனுமதி இல்லாமல் வீதியை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்தமையின் காரணமாக காணி உரிமையாளர்களினால் சபைக்கு எதிராக தொடுக்கப்பட்ட 4 வழக்குகள் காணப்பட்டதுடன் வழக்கிற்காக ரூபா 13,100 தொகை சட்டத்தரணி மற்றும் ஆவணங்களைத் தயாரிக்கும் கட்டணத்திற்காகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே சபைக்குச் சொந்தமான மீன்கடைகளின் உரித்து தொடர்பாகக் காணப்பட்ட 6749 ஆம் இலக்க வழக்கிற்கு மீள் முறையீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த முறையீடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடிவடைந்திருக்கவில்லை.

(இ) சபையினால் இஹல கல்பிட்டிய வீதியிலிருந்து வயலைச் சுற்றி அமைந்துள்ள வீதியை அபிவிருத்தி செய்ததன் காரணமாக வரகாபொல நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததன் பின்னர் கமநல சேவைகள் ஆணையாளருக்கு இது தொடர்பாக அதிகாரமிருந்தமையினால் அதன் பிரகாரம் செயற்படுமாறு அறிவித்து 2008 ஒக்தோபர் 30 ஆந் திகதி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் காணியின் உரிமையாளரினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தொடுக்கப்பட்ட வழக்கில் 2011 யூன் 10 ஆந் திகதி ஆணைக்குழுவினால் போடப்பட்ட மண் மற்றும் கல் போன்றவைகளை அகற்றுமாறு சபைக்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையினால் 2011 செப்தெம்பர் 23 ஆந் திகதி வீதியில் மண் மற்றும் கற்களை அகற்றும் போது அதற்கடுத்தாகவுள்ள வயல் காணிக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டு அக் காணியின் உரிமையாளரினால் 2011 ஒக்தோபர் 26 ஆந் திகதி HRC/2949/11 ஆம் இலக்கத்தின் கீழ் சபைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) புரநெகுமயின் கீழ் மூலதனச் செலவினமாக ரூபா 50 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஆ) சபைக்குரிய கூட்டிணைந்த திட்டம் காணப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடைபெற்றிருந்தது.

(இ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 7,523,672 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா 21,822 படி அந்நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அந்த அறவிடல்கள் சபையின் எந்த ஊழியர்களுக்குரியது என சபை அறிவித்திருக்கவில்லை.

## 2.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை அகற்றுதல்கள் 3 இடங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் போது குப்பைகளை வகைப்படுத்தாமல் வெட்டப்பட்டிருந்த குழிகளுக்குள் போடப்பட்டிருந்தது. ரூபா 5,210,000 தொகை செலவில் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதில் கூட்டுப்பசளை உற்பத்தி மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையத்தில் அகற்றப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்தி அகற்றுதலோ அல்லது கூட்டுப்பசளை உற்பத்தி மேற்கொள்ளப்படாமையின் காரணமாக நிலையத்தைச் சுற்றி அசுத்தமானதாகக் காணப்பட்டது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) மனித வள முகாமைத்துவம்